## பாதுகாப்பான மின்சாரப் பயன்பாட்டுக்கான வழிமுறைகள்

- பழுதான மின்சாதனங்களைப் பயன்படுத்தக்கூடாது
- உடைந்த சுவிட்ச் பிளக் , பீயூஸ் போன்றவற்றை உடனடியாக மாற்ற வேண்டும்
- குளியல் அறையில் ஈரமாக வாய்ப்புள்ள இடங்களில் சுவிட்சுகளைப் பொருத்தக்கூடாது
- பிளக் சுவிட்சை அணைத்தபிறகே மின்விசிறி அயர்ன்பாக்ஸ் செல்போன் சார்ஜர் போன்றவற்றை பிளக்கில் இணைக்க வேண்டும்
- டி.வி ஆண்டனாக்களில் மின்சார வயரைக் கட்டக்கூடாது
- மின்சார சார்ஜரில் இணைப்பில் இருக்கும்போது செல்போனைப் பயன்படுத்தக்கூடாது
- நில இணைப்பைச் (Earthing) சரிபார்த்துக்கொள்ள வேண்டும்
- தரை கழுவும்போது ஈரக்கைகளால் இணைப்பிலிருக்கும் டேபில்பேன் பெடஸ்டல் பேன் போன்றவற்றை நகர்த்தக்கூடாது அவற்றை முன்னதாகவே மின் இணைப்பிலிருந்து அகற்றிவிட வேண்டும்
- கிரைண்டர் போன்ற உபகரனங்களுக்குத் தனியாக நில இணைப்புக் (Earthing) கொடுக்க வேண்டும்
- ஒரு மின்சாதனத்துக்கான ஒயரில் வேறு எந்த மின்சாதனத்தையும் இணைக்ககூடாது
- சுவிட்சு பியூஸ் போன்றவற்றை மாற்றும் போது அதே அளவு திறன்கொண்ட சாதனங்களையே பொருத்த வேண்டும்
- சுவிட்சு போர்டு மின்மோட்டார் தண்ணீர் பம்பு மோட்டார் போன்றவற்றின்மீது தண்ணீர்/மழை நீர் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்
- அரசு உரிமம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலமாகமட்டுமே மின்சார ஒயரிங் வேலைகளைச் செய்யவேண்டும்
- ஐ.எஸ்.ஐ முத்திரை பெற்ற தரமான மின்சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும்

18/10/17

**EXECUTIVE ENGINEER**
**ELECTRICITY DEPARTMENT**
**KARAIKAL**

## மழைக்காலங்களில் மின் விபத்துக்களைத் தவிர்ப்பது எப்படி

- மின் கம்பங்களில் பந்தல், கொடிக்கம்பி மற்றும் கயிறு போன்றவற்றைக் கட்டக்கூடாது
- மின்கம்பங்களில் மாடு முதலிய வீட்டு விலங்குகளைக் கட்டக்கூடாது
- மின்துறை மேல்நிலைக்கம்பிகளுக்கு அருகில் உள்ள மரக்கிளைகளை அகற்ற மின்துறை அலுவலர்களை அணுகவும்
- மழைக்காலத்தில் இடி மின்னல் விழும்போது தண்ணீர் தேங்கியுள்ள பகுதியில் நிற்கக்கூடாது
- மின்கம்பிகள் அறுந்து கிடந்தால் தொட முயற்சிக்க வேண்டாம் உடனடியாக மின்துறை அலுவலர்களுக்குத் தெரிவிக்க வேண்டும் (கட்டணமில்லாத் தொலை பேசி எண்கள் 1800 425 1912)
- இடி மின்னல் இருக்கும்போது டிவி, கம்ப்யூட்டர், தொலைபேசி போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டாம்
- மின் மாற்றிகள், மின்பெட்டிகள் , மின் இழுவைக்கம்பிகள் (stay wire) ஆகியவற்றைத் தொடக்கூடாது
- கனரக வாகனங்களை மின்கம்பங்கள், மின்மாற்றிகள் அருகில் நிறுத்தி பொருட்களை ஏற்றவோ இறக்கவோ கூடாது
- மின்சாரத்தால் ஏற்படும் தீயைத் தண்ணீரைக்கொண்டு அணைக்க முயற்சிக்க வேண்டாம் தீயணைப்புத் துறையின் உதவியை நாடவும்
- வீட்டில் சுவர்களில் மின்சாதனங்களில் மின்அதிர்ச்சியை உணர்ந்தால் உலர்ந்த ரப்பர் காலணி அணிந்து மெயின் சுவிட்சை அணைத்துவிடவும் மின்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் (கட்டணமில்லாத் தொலை பேசி எண்கள் 1800 425 1912)

GOVT. OF PUDUCHERRY
KARAIKAL
INFORMATION & PUBLICITY DEPT